Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    மார்கழி 02    (17 - 12 - 1991)    செவ்வாய்க்கிழமை    ஓசை 302

## நிவாரண விண்ணப்பங்கள் செயலகத்தில் தேக்கம்

யாழ். மாவட்டத்தின் புனர்வாழ்வு நிவாரணம்கோரும் விண்ணப்பங்கள் யாழ். செயலகத்தில் தேங்கியுள்ளன. இவ்விண்ணப்பங்களுக்குரிய நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு வேண்டிய நிதி யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவினரிடம் இல்லை. இராணுவ நடவடிக்கைகளால் மரணமடைந்தோர், காயமடைந்தோர், அங்கவீனமடைந்தோர், குடியிருப்புக்கள் சேதமடைந்தோர் ஆகியோரது நிவாரணம் கோரும் நூற்றுக்கணக்கான விண்ணப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாண மக்களின் உணவை சிங்கள இராணுவம் விழுங்குகிறது

## ஈழம் கோரிக்கையை கைவிட அநுரா கோரிக்கை

(கொழும்பு)

ஈழம் கோரிக்கையைக் கைவிட்டால் தமிழர்களின் ஏனைய கோரிக்கைகளை, குறிப்பாக தமிழர்களின் தன்னாட்சிக் கோரிக்கையை சிங்கள மக்கள் ஆதரிப்பார்கள்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சி அகில இலங்கை அமைப்பாளர் அனுர பண்டாரநாயக்க தெரிவித்தார்.

சேர் ராஸிக் பரீட் வேட்போர் கூட்டத்தில் பேசிய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குடியிருப்புப் பகுதிகள் மீது எறிகணை வீச்சு

(நமது நிருபர்)

வளலாய் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுக்காலை பத்துமணியளவில் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர். இராணுவத்தினரால் ஏவப்பட்ட பல எறிகணைகள் இடைக்காடு, கொத்தடி வைரவர்கோயிலடியில் விழுந்து வெடித்துள்ளன. இதனால் பொது மக்களின் உடைமைகள் பலத்த சேதமடைந்துள்ளன.

இதேவேளை நேற்று முன்தினம் கீரிமலை கடற்பகுதியிலிருந்து கொல்லன்கலட்டி,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசனில் கப்பல்கள் வரும் மர்மம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டிற்கென கப்பல்கள் மூலம் காங்கேசன்துறைமுகத்திற்கு அனுப்பப்படும் உணவுப் பொருள்களைஇராணுவம்தனது தேவைகளுக்குப்பயன்படுத்திவருகிறது. யாழ் மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை அனுப்புவதற்கென ஒழுங்கு செய்யப்பட்ட கப்பல்களை தனது தேவைகளைப் பூர்த்திசெய்ய இராணுவத்தினர் பாவிக்கின்றனர். இதனால் யாழ்ப்பாணத்தில் பெரும் உணவு நெருக்கடி ஏற்பட்டுவருகிறது.

காங்கேசன்துறை துறைமுகம் திறக்கப்படாத வேளையிலும் யாழ் குடாநாட்டிற்கு அனுப்பப்பட்டுவரும் அத்தியாவசியப் பொருட்களின் குறிப்பிடக்கூடிய அளவு உணவுப் பொருள்களை அத்துறைமுகத்திற்கு அரசாங்கம் அனுப்பிவைத்து வருகின்றது. யாழ். மக்களுக்கு அத்தியாவசியப்பொருள்களை அனுப்புவதற்கென ஒழுங்கு செய்யப்பட்ட கப்பலில் வரும் இந்த உணவுப் பொருள்களை சிங்கள இராணுவம் தற்பொழுது தனது தேவைக்கே முழுமையாகப் பயன்படுத்தி வருகின்றது.

இதேவேளை பருத்தித்துறை துறைமுகத்திற்கு கடந்த நவம்பர் மாதம் 11 ஆம் திகதிக்குப் பின்னர் உணவுக் கப்பல்கள் வந்து சேரவில்லை. இதன் காரணமாக யாழ் குடாநாட்டில் உணவு நெருக்கடி தீவிரமடைந்துள்ளது. அரச செயலகத்தில் அரிசி, பால்மா வகைகள், பருப்பு வகைகள் ஆகிய அத்தியாவசியப் பொருள்கள் எவையும் கையிருப்பில் இல்லை. இதேநேரம் விலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழக சிறையில் வாடும் புலிகளை நேரில் சென்று பார்வையிடுக

## போதனா வைத்தியசாலைக்கு சிமெந்து வழங்க மறுப்பு;

த்துமணியளவில் குடியிருப்பு பகுதிகளை நோக்கி எறிகணை தாக்குதல்களை மேற் கொண்டனர். இராணுவத்தினரால் ஏவப்பட்ட பல எறிகணைகள் சேதமடைந்துள்ளன.

இதேவேளை நேற்று முன்தினம் கீரிமலை கடற்பகுதியிலிருந்து கொலிலன்கலட்டி,

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழக சிறையில் வாடும் புலிகளை நேரில் சென்று பார்வையிடுக

## செஞ்சிலுவையிடம் புலிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழகத்திலுள்ள சிறைகளில் வருடக்கணக்காக அடிப்படை வசதிகளற்று வாடும் எழுபதைந்துவிடுதலைப்புலிகளை நேரில் சென்று பார்வையிடுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழகத்தில் கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்த காலப்பகுதியில் இருந்து இன்றுவரை சிறைச்சாலைகளில் அடிப்படை வசதிகளற்று வாழ்வரும் விடுதலைப் புலிப் போராளிகள் பலர் நோயாளர்கள், அங்கவீனமுற்றவர்கள், பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களாவர். இவர்களது நிலைமை மிகவும் மோசமானதாக இருப்பதாக தமக்கு தகவல் கிடைத்ததை தொடர்ந்து இந்த வேண்டுகோளை யாழ்ப்பாண சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி ஊடாக விடுதலைப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## போதனா வைத்தியசாலைக்கு

# சிமெந்து வழங்க மறுப்பு; திருத்தவேலைகள் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் சிமெந்துவழங்க மறுத்ததைத் தொடர்ந்து திருத்த வேலைகள் கைவிடப்பட்டுள்ளதாகயாழ் போதனா வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அண்மையில் கொழும்பு சென்ற வைத்திய அதிகாரிகள் குழு ஒன்று இதுதொடர்பாக கொழும்பில் அமைச்சின் செய

(3 ஆம் பக்கம் பார்க்க)

# போர் நிறுத்தம் ஏற்பட்டால் கண்காணிக்க கனடா தயார்

(கொழும்பு)

தேசிய பிரச்சினைக்குச் சமரசத் தீர்வுகாணும் முயற்சியில் ஒரு யுத்த நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டு அதைக் கண்காணிக்க அழைக்கப்பட்டால் கண்காணிப்பிலீடுபடக் கனடா தயாராக இருப்பதாக பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவரான மங்களமுனசிங்க எம். பி. தெரிவித்துள்ளார்.

மனிதாபிமான யுத்த நிறுத்தமும், சௌக்கிய பிரச்சினைகளும் என்ற தலைப்பில் கனடாவில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொள்ளச் சென்ற இலங்கை தூதுக்குழுவில் அங்கம்பெற்றிருந்த திரு. மங்கள முனசிங்க அங்கு கனேடிய அரசாங்கத்தின் வெளிவிவகாரப் பணிப்பாளரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றதெரிவுக் குழுவுக்கு கம்பியூட்டர்கள் உட்பட ஏனைய நவீன உபகரணங்களைக் கொடுத்து உதவ தயாராக இருப்பதாகவும், யுத்த நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டு அதனைக் கண்காணிக்க அழைத்தால் கனடா அதற்குத் தயாராக இருப்பதாகவும் தனக்குதெரிவிக்கப்பட்டதாக திரு. மங்கள முனசிங்க குறிப்பிட்டுள்ளார்.

## அரிசி விற்பனைக்கான கட்டுப்பாடு நீக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட வர்த்தகர்கள் அரிசி விற்பதற்கிருந்த கட்டுப்பாடு இன்றுமுதல் நீக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். இதுவரை காலமும் யாழ் வர்த்தகர்கள் அரிசி விற்பதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

எவ்வாறெனினும் கட்டுப்பாடு நீக்கப்பட்டதும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பெரும் தொகையான நெல் தேங்கிக்

(3ஆம் பக்கம் பார்க்க)

## லொறி, சைக்கிள் விபத்து; இளம் பெண் பலி

(யாழ்ப்பாணம்)

லொறி, சைக்கிள்மோதலில் இளம் யுவதி ஒருவர் பலியானார். ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுக் காலை எட்டுமணியளவில் கொக்குவில் சந்தியில் நடைபெற்ற மேற்படி விபத்தில் சைக்கிளில் சென்ற பிரம்படியைச் சேர்ந்த தனேஸ்வரி சண்முகநாதன் (வயது 32)

(3 ஆம் பக்கம் பார்க்க)

# தம்மை ஆளும் சுயாட்சி உரிமை தமிழருக்கு வழங்கவேண்டும்

## பத்திரிகையாளர் மத்தியில் தொண்டா

(கொழும்பு)

"இனப்பிரச்சினை தொடர்பாக நான் முன்வைத்த கோரிக்கைகளுக்கு என்னசெய்யும் வைக்கலாம். பெயர் முக்கியமல்ல. அதனுள் அடங்கியுள்ள அதிகாரப்பரவலாக்கல் அளவே முக்கியம்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் தம்மைத் தாமே ஆளக்கூடிய சுயாட்சி உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்பதே முக்கியம்" இவ்வாறு கொழும்பு சௌளுப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தொண்டாவின் தீர்வுதிட்டத்தை பௌத்தபீடங்கள் தூக்கி வீசின

(கொழும்பு)

அமைச்சர் தொண்டமானின் தீர்வுத் திட்டத்தினை பௌத்தமதப் பிரிவுகள் தூக்கி எறிந்துவிட்டதாக பி.பி.ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

திரு. தொண்டமானின் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை வேண்டவே வேண்டாம் என பௌத்தமதபிரிவுகளும், சிங்கள இனவாத சக்திகளும் தூக்கிஎறிந்துவிட்டன. வடக்கு - கிழக்கு இணைப்பை அவை வன்மையாக எதிர்க்கின்றன.

மேலும் கிழக்குப் பகுதியில், இராணுவத்தினரின் காவலுடன் துணையோடு சிங்களக்குடியேற்றங்கள் வலிந்து ஏற்படுத்தப் படுகின்றன. குறிப்பாக மணலாறுப் பகுதியை சிங்கள

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உரிமை மறுக்கப்பட்டதாக யாழ். எம்.பிகள் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

ஜனநாயக நடைமுறையில் கலந்து கொண்டு எமது மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான உரிமை எமக்கு மறுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு யாழ்.மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர்களான ஈ.டேவிட் செபஸ்தியாம்பிள்ளையும்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### வகுப்புகள்

G.C.E. (A/L) Physics (A/L) 91 துரித மீட்டல் வகுப்புகளும் மற்றும் 92/93 வருட பரீட்சைகளுக்கான வகுப்புகளும் தனித்தனியாகவும், குழுக்களாகவும் அனுபவம் மிக்க பட்டதாரி ஆசிரியரின் வீட்டில் வைத்து கற்பிக்கப்படும். தொடர்பு:- வசந்தம் புத்தகசாலை. 405 ஸ்ரான்லி றோட் [வெற்றோலியம் கூட்டுத்தாபனம் முன்பாக] யாழ்ப்பாணம்.

(R/2005)

### சுருக்கெழுத்து

வடமராட்சி சுருக்கெழுத்துச் சமூக அங்கத்தவர்கள் 1991/92ம் ஆண்டிற்கான சந்தா ரூபா 25/ ஐ வதிரியில் உள்ள சுழற்பயிற்சி நிலையத்தில் 1-1-92 முதல் 11-1-92 வரை செலுத்தி தமது அங்கத்துவத்தை உறுதி செய்து கொள்ளவும்- செயலாளர். (R/2007)


## பிச்சைக்காரர்கள்

# 'சார்க்' மாநாட்டிற்காக பிடிக்கப்படவில்லை

**— தயாரட்ணா**

(கொழும்பு)

சார்க் உச்சி மாநாட்டை யொட்டியே கொழும்பு நகரில் பிச்சைக்காரர்கள் சுற்றி வளைக்கப்பட்டதாக வெளிவந்த வதந்தியினை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் பி. தயாரட்ணா மறுத்துள்ளார்.

சில வாரங்களுக்கு முன்னர் கொழும்பில் 900 பிச்சைக்காரர்கள் சுற்றி வளைக்கப்பட்டு ஹிங்குரக்கொடையிலுள்ள 250 ஏக்கர் முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் எனவும், புதிய திட்டமொன்றின் கீழ் 65 வயதினர்கள் சுற்றி வளைக்கப்பட்டு முதியோர் இல்லங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் எனவும் தெரிவித்தார். வயோதிப இல்லங்களில் இருப்பவர்களுக்கு உணவும், உறைவிடமும் அவர்களின் வாழும் காலமெல்லாம் வழங்கப்படுமெனவும், பிச்சைக்காரர்களுக்கு சுயவேலை வாய்ப்பு, தொழிற் பயிற்சி, கல்வி ஆகியவையும் வழங்கப்படுகின்றன எனவும் தெரிவித்தார்.


ஸ்ரீதர் திரையரங்கில்

அல்ஜீரிய நாட்டு

# விடுதலைப் போராட்டம்

[தமிழாக்கம் செய்யப்பட்டது]

தினசரி 4.00 மணிக்கும்

சனி, ஞாயிறுகளில் 4, 6 மணிக்கும்

காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன

(B/3564)


# புலோலியில் வெள்ளி இரவு மூன்று கொள்ளைகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு அருகாமையில் புலோலியில் வெள்ளிக்கிழமை இரவு மூன்று திருட்டுக்கள் இடம் பெற்றுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை பிரான்ஸ் வைத்திய சேவைக்குழுவின் களஞ்சியத்தின் சிற (கூரை) பிரிக்கப்பட்டு சுமார் 50 லீற்றர் பெற்றோலும் செல்லராசா என்பவரின் எண்ணெய் விற்பனைக்கடை கூரை பிரிக்கப்பட்டு வெற்று எண்ணெய் பீப்பாய்கள் கயிறு என்பனவும் அருகில் உள்ள ஆறுமுகம் என்பவரின் பிஸ்கற் விற்பனை நிலையம் உடைக்கப்பட்டு உடுபுடவைகள் பணம் என்பனவும் கொள்ளையிடப்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

(25)

## அமெரிக்க குழு வியட்நாமில்

வியட்நாமும், அமெரிக்காவும் மீண்டும் நல்லுறவைத் தொடங்கும் ஒரு கட்டமாக அமெரிக்க வர்த்தக தூதுக் குழுவொன்று வியட்நாம் தலைநகர் ஹனோய் சென்றுள்ளது. அமெரிக்க அதிகாரிகள் மட்டக்குழு வொன்று வியட்நாம் சென்றிருப்பது இதுவே முதற்தடவை.


பருத்தித்துறை காங்கேசன்துறை இறங்குதுறையில் கப்பல் மூலம் கொண்டு வரப்படும் பொருள்களை

அத்தியாவசியக் களஞ்சியத்திற்கு

ஏற்றிக் கொண்டு சென்று இறக்குவதற்கான

# கூறுவிலை கோரல்

கப்பலில் இருந்து இறக்கப்படும் (4,000) நாலாயிரம் மெற்றிக் தொன் அண்ணளவான உலர் உணவுப் பொருட்களை பருத்தித்துறை. காங்கேசன்துறை துறைமுக மேடைகளிலிருந்து கீழ்காணும் இடங்களில் உள்ள உணவுக் களஞ்சியங்களுக்கு கொண்டு செல்வதற்கு லொறிச் சொந்தக்காரர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றன.

1. காங்கேசன்துறையில் இருந்து யாழ்ப்பாணம் (கோண்டாவில் பி. எம் சி. குருநகர்)
2. பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் (பி. எம். சி. குருநகர்) கோண்டாவில்.

கூறுவிலைகளை எனது காரியாலயத்தில் பெறக்கூடிய படிவத்தில் இரண்டு பிரதியில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரை இடப்பட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஏற்றியிறக்கலுக்கான கூறுவிலை" எனக் குறிப்பிட்டு 1991 - 12 - 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் எனது அலுவலகத்திலுள்ள கூறுவிலை கோரல் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை எனது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்

புனர்வாழ்வுப்பகுதி, செ. பத்மநாதன்,



# நூலகர் தேவை

வடமராட்சியில் நெல்லியடிப் பிரதேசத்தில் இயங்கி வரும் முன்னணி நூலகமொன்றை (திணைக்கள நூலகமல்ல) சிறப்பாக நிர்வகித்து நடாத்துவதற்கு நூலகவியல் பயிற்சி பெற்ற நூலகர் தேவை. நியாயமான வேதனம் வழங்கப்படும். தகுதியுடையோர்,

ஆ. நா. சு. திருச்செல்வம்
நூலகர்,
மந்திகை,
புலோலி.

என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.



# பாரதிதாசன் கல்வி நிறுவனம்

(BECON)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

## A/L 93

புதிய பிரிவு

| | | | |
|---|---|---|---|
| 8-00 | 9-00 | தமிழ் | திருமதி மீரா |
| 8-00 | 9-00 | கணக்கியல் | ) மரியதாஸ் ) யோகராஜா ) சௌந்தி |
| 9-00 | 10-00 | புவியியல் | ஜோசப் |
| 10-00 | 11-00 | அளவையியல் | S. S. மனோகரன் |
| 11-00 | 12-00 | பொருளியல் | வரதராஜன் |
| 12-00 | 1-00 | இந்துநாகரீகம் | திருமதி அருள்நங்கை |
| 1-00 | 2-00 | வர்த்தகம் | பிரபல ஆசிரியர் |
| 1-00 | 2-00 | அரசியல் | செல்வரட்ணம் |

ஆரம்பம்:- 21-12-91

சனி - காலை 8-00 மணி

குறிப்பு:-

முதலாவது பிரிவு முன்னர் அறிவித்தது போன்று 4-1-92ல் ஆரம்பமாகும். (B/3644)

அரக்கு முத்திரை இடப்பட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஏற்றிவிறக்கலுக்கான கூறு விலை" எனக் குறிப்பிட்டு 1991 - 12 - 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு முன்னர் எனது அலுவலகத்திலுள்ள கூறுவிலை கோரல் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை எனது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்

புனர்வாழ்வுப்பகுதி
செயலகம்,
யாழ்ப்பாணம்.

செ. பத்மநாதன்,
திட்டப்பணிப்பாளர்,
புனர்வாழ்வுப்பகுதி,
யாழ். அரசாங்க அதிபருக்காக

(B/3637)

பெற்ற நூலகர் தேவை. நியாயமான வேதனம் வழங்கப்படும். தகுதியுடையோர்,

ஆ. நா. சு. திருச்செல்வம்
நூலகர்,
மந்திகை,
புலோலி.

என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

நூலக இயக்குநர்

(B-3642)

சனி - காலை 8-00 மணி

குறிப்பு:-
முதலாவது பிரிவு முன்னர் அறிவித்தது போன்று 4-1-92ல் ஆரம்பமாகும். (B/3644)

## 1-ம் ஆண்டு நினைவு அஞ்சலியும் ஆண்டுத் திவசமும்



வீர ஜனனம் 05 - 08 - 1974

வீர மரணம் 28 - 12 - 1990

### வீரவேங்கை பாலா
### (இராசையா தவநேசன்)

விடுதலை விரைவாய்ப் பெற்று
வீட்டிற்கு உழைப்பதோடு
கெடுதலே இல்லா நண்பர்
கூட்டத்தில் இணைந்து நீயும்
நாட்டிற்காய் உழைத்து வாழ்ந்தாய்.

நாவற்காடு,
அச்சுவேலி

(R/1999)

குடும்பத்தினர், உறவினர்,
நண்பர்கள்.

## புதிய உயர் கல்லூரி
## NEW COLLEGE OF HIGH STUDIES

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்

G. A. Q

ENGLISH LITERATURE

திரு. சோ. பத்மநாதன்

ஆரம்பமாகி விட்டன

- குறிப்பிட்ட மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.
- பேராதனை, யாழ், பல்கலைக்கழகங்களுக்கான

G. A. Q
1st IN COM
(சனி, ஞாயிறு)

விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

திருமதி ஓ. அருள்நங்கை
- நிர்வாகி -

(B/3649)

## நினைவு கூருகின்றோம்...

**1991 - 12 - 17**

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் சுகவீனம் காரணமாக சாவடைந்த

சுரேஷ் (க. தயானந்தன் - கோவில்போரதீவு கல்லாறு மட்டக்களப்பு)

1988 ஆம் ஆண்டு நெடுங்கேணியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பினால் ஏற்பட்ட மோதலின்போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய

லெப். ரவி (இராமச்சந்திரன் ரவிச்சந்திரன் - ஓடக்கரை, பருத்தித்துறை)

அம்பாறை, அக்கரைப்பற்று, ஆலையடி வேம்புப் பகுதியில் சிறிலங்கா ஊர்காவற் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/3639)

## சிந்தனைக்கு

அதிகம் குறை கூறுபவர்களே, அதிகம் குறை கூறப்படுவதற்கு உரியவர்கள்.

- மேத்யூ ஹென்றி


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 17-12-1991
தொலைபேசி
ஆசிரியர்பீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் 05


# முதலாவது அறிவிப்பு

"அமைச்சர் எஸ். தொண்டமான் ஜனவரியில் யாழ்ப்பாணம் சென்றதும் விடுதலைப் புலிகள் அவரை பணயக் கைதியாகப் பிடித்து வைத்துக் கொண்டு வடக்கு கிழக்கில் இருந்து சிறிலங்கா இராணுவத்தை வாபஸ் பெறக் கோருவார்கள்" இவ்வாறு நேற்று முன்தினம் வெளியாகிய ராவய பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழர் தேசிய பிரச்சினை சம்பந்தமாக தனது தீர்வுத் திட்டத்திற்கு தென்னிலங்கையில் உள்ள சிங்கள அரசியற் கட்சிகளின் ஏகோபித்த ஆதரவு தேவை. அப்படியான ஆதரவு இருந்தால்தான் சமாதான தீர்வுத் திட்டத்திற்கு இணங்குமாறு புலிகளை நான் வற்புறுத்த முடியும். சமாதானம் ஏற்பட வாய்ப்பு ஏற்படும் என அமைச்சர் தொண்டமான் ஆதரவு கோரி விடுத்த செய்தி வெளியாகி 24 மணி நேரத்திற்குள் "ராவய" பத்திரிகை இவ்வாறானதொரு புரளியைக் கிளப்பி தொண்டமானின் சமரச முயற்சிக்கு ஊறு விளைவிக்க முற்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்விற்கு அமைச்சர் தொண்டமான் சிங்கள அரசியற் கட்சிகளின் ஆதரவு கோரியிருந்தமை ஓர் வரவேற்கத் தக்க அம்சம் என நேற்று இப்பகுதியிலேயே நாம் குறிப்பிட்டிருந்தோம். இதன் மூலம் இனப்பிரச்சினைத் தீர்வில் சிங்கள அரசியல் கட்சிகள் எங்கு நிற்கின்றன என்பதையும் புரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கும் எனவும் குறிப்பிட்டிருந்தோம்.

அதற்கான முதல் அறிவிப்பு "ராவய" பத்திரிகையில் வெளிவந்துள்ளது. ராவய பத்திரிகை தற்பொழுது ஐ. தே. க. அரசாங்கத்தின் எதிரணியினரின் ஆதரவுப் பத்திரிகையாகும். அதிலும் குறிப்பாக ஐ. தே. கட்சி அதிருப்தியாளர்களான லலித், காமினி குழுவினரின் ஆதரவுப்பத்திரிகையாகும். இப்பத்திரிகையின் கருத்தோட்டங்களிலும் செய்திகளிலும் ஐ. தே. க. அதிருப்தியாளர்களின் உணர்வுகள் பிரதிபலிக்கப்படுகின்றன.

வடக்கே திரு. தொண்டமான் சென்றால் அவரைப் புலிகள் பணயக் கைதியாகப் பிடிக்கக் கொள்வார்கள் என்ற செய்தி வேண்டுமென்றே விஷமத்தனமாகத் தொண்டமானின் தீர்வுத்திட்டத்தைக் குழப்பும் நடவடிக்கையாகும். திரு. தொண்டமானின் தீர்வுத் திட்டத்தை புலிகள் நிராகரிக்கலாம் / ஏற்கலாம். அது தமிழருக்கு எந்தளவிற்கு சுயாட்சி வழங்குகின்றது என்பதைப் பொறுத்த விடயம். ஆனால், விடுதலைப் புலிகள் சமாதான முயற்சியில் ஈடுபடுபவர்களை பணயக் கைதிகளாகப் பிடிப்பது என்பதும், அவர்களை வைத்துப் பேரம் பேசுவது என்பதும் அவர்களுடைய வரலாற்றில் இல்லை. ஆனால், போர்க்கைதிகள், ஆக்கிரமிப்பாளர்கள் விவகாரம் அவ்வாறானதல்ல.

அண்மையில் இரு தாய்லாந்துப் பிரஜைகளை விடுதலைப்புலிகள் மட்டக்களப்புக் காட்டுப் பகுதியில் வைத்துக் கைது செய்தார்கள். புலிகளால் இவர்கள் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டதாக செய்திகள் வெளிவந்தன. இதனைக்குறித்து செய்தி வெளியிட்ட பி.பி.ஸி விடுதலைப் புலிகள் காஷ்மீர் தீவிரவாதிகள் போன்று வெளிநாட்டவரை பணயக் கைதிகளாகப் பிடிப்பதில்லை. ஆகையினால், அவர்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என விடுதலைப் புலிகளைப்பற்றிய தனது கணிப்பீட்டைவெளியிட்டது உண்மையும். அதுவே தாய்லாந்து பிரஜைகளும் விடுதலை செய்யப்பட்டார்கள்.

இந்நிலையில் ராவய பத்திரிகையின் செய்தி எவ்விதக் கணிப்பீடும் அற்ற ஒரு ஆகவலாகும். அதேவேளை தொண்டமானின் தீர்வு திட்டத்திற்கு முட்டுக்கட்டை போடும் முதல் அறிவிப்பாகும். இந்த அறிவிப்பு ஐ. தே. க. அதிருப்தியாளர் பக்கத்தில் இருந்து மறைமுகமாக வந்துள்ளது. இதேபோன்று போகப் போக சமாதானத் தீர்வுத் திட்டத்திற்குப் பேரினவாத சக்திகள் போடும் முட்டுக்கட்டைகள் எங்கிருந்து, எவ்வெவ்வகையில் வரும் என்பதை திட்டவட்டமாக கூற முடியாது. ஆனால், இவை அதிர்ச்சியளிக்கும் வகையில் தொண்டமானின் நம்பிக்கைக்குப் பாத்திரமான பகுதியில் இருந்தும் வரலாம். இது குறித்து தமிழ் மக்கள் ஆச்சரியப்படப் போவதில்லை. திரு. தொண்டமான் அதிர்ச்சி அடையாமல் இருந்தால் சரி.

# "அபிவிருத்தித் திட்டங்களை தீட்டுவதும் போராட்டத்தின் முக்கிய பங்களிப்பே"

- மூர்த்தி

(மருதங்கேணி)

"ஆயுதம் ஏந்திப் போராடுவது மட்டும் தான் விடுதலைப் போராட்டத்தின் பங்களிப்பு அல்ல. தமிழீழத்தின் வளங்களைப் பாதுகாப்பதும் அபிவிருத்திக்கான திட்டங்களைத் தீட்டுவதும் அவற்றினை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்குவதும் விடுதலைப் போராட்டத்தின் முக்கிய பங்களிப்பாகும். இந்நிலையிலேயே இங்கு கூடியிருக்கும் துறைசார் வல்லுநர்களாகிய நீங்கள் இவற்றில் சாதனைகளை நிலைநாட்டவேண்டும்"

இவ்வாறு, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலே தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட நன்னீர், கடற்றொழில் பாதுகாப்புக் கருத்தரங்கிலே உரையாற்றிய தமிழீழ அரசியற் பொறுப்பாளர் திரு. மூர்த்தி குறிப்பிட்டார். யாழ்ப்பாண பல்கலைக்கழக விலங்கியல்துறை பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கினார். பல்வேறு திணைக்களங்களின் உயரதிகாரிகள், துறைசார் வல்லுநர்கள் கலந்து கொண்ட இக் கருத்தரங்கிலே தமிழீழ அரசியல் பொறுப்பாளர் திரு. மூர்த்தி குறிப்பிட்டதாவது:

தமிழீழ அபிவிருத்திகளுக்கான முழுமையான ஒத்துழைப்புக்களையும் தமிழீழ மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்க வேண்டும். போர்க்கால கட்டங்களிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழீழ மக்களுக்கு பல்வேறு வகையான சேவைகளை வழங்குவதை நீங்கள் காண்கிறீர்கள். தமிழீழ அபிவிருத்திகளில் விவசாய அபிவிருத்தி, கடற்றொழில் நன்னீர் பாதுகாப்பு போன்றவற்றிற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு நடைமுறைப்படுத்த வேண்டியது முக்கியமாகும். இவற்றிற்குரிய திட்டங்களை தமிழீழ விடுதலைப்புலிகள் நிறைவேற்றியே தீருவர்.

யாழ் குடாநாட்டிலே நன்னீர் உவர் நீராக மாறி வருவது தமிழீழத்திற்கு ஏற்படுகின்ற சவால்களே இருக்கின்றன. நன்னீர் உவர் நீராக மாறும் இப் பேராபத்து எதிர்காலத்தில் தமிழீழத்தில் பாரிய பயங்கர தாக்கங்களை ஏற்படுத்தும். இதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் விடுதலைப் போராட்டத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். மழை நீர் வீணே கடலுக்குப் பாய்ச்சப்படுவது தடை செய்யப்பட வேண்டும். மழை நீர் வசதியான இடங்களில் தேக்கப்படவேண்டும். இதற்கான திட்டங்கள் தீட்டப்படவேண்டும். அடுத்தவருடம் மழை நீர் கடலுக்குப் பாய்ச்சப்படுவது முழுமையாக நிறுத்தப்படவேண்டும்.

எமது இன்றைய போராட்டத்திலே இதுவும் முக்கிய பணியாகும். உவர் நீர் நன்னீருக்குள் புகுந்து உவர் நீராவதும் தடுக்கப்பட வேண்டும். தமிழீழ ஆய்வு நிறுவனம், தேச நிர்மாணிகள் போன்ற நிறுவனங்கள் நன்னீர் பாதுகாப்புத்திட்டங்களை நிறைவேற்ற ஆயத்தமாகவுள்ளன.

சிறிலங்கா அரசின் உதவிகள் இல்லை, வசதிகள் இல்லையே என்பதற்காக தமிழீழத்தின் இது போன்ற திட்டங்களைத் தயாரிக்காமல் விட்டுவிடக்கூடாது. தமிழீழ அபிவிருத்திக்கான தயாரிக்கும் திட்டங்களைத் தமிழீழ விடுதலைப்புலிகள் நிச்சயம் நடைமுறைப்படுத்துவர். மிகக் குறுகிய காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் வழிநடத்தலில் தமிழீழ ஆய்வு நிறுவனம் தேசநிர்மாணிகளின் அனுசரணையுடன் தமிழீழ மக்கள் சுமார் 76 இலட்சம் ரூ. பெறுமதியில் 31 குளங்கள் 32 வாய்க்கால்கள், 2 வடிகால்கள், அணைக்கட்டுக்களைப் புனரமைத்துள்ளனர். இது கடந்த 40 வருடங்களாக சிறிலங்கா அரசாங்கம் தமிழீழத்திலே செய்யாத அபிவிருத்தி நடவடிக்கைகளாகும். சிறிலங்கா அரசாங்கம் இது போன்ற நடவடிக்கைகளை தமிழீழத்தில் திட்டமிட்டு நிறுத்திவந்துள்ளது (25)

## ஆசிரியர்களுக்கான ஆபத்துக் காலசேவை

# ஊக்குவிப்புக் கொடுப்பனவு கட்டுநிதி வந்துசேர்ந்தது

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர், ஆசிரியர்களுக்கான ஆபத்துக்காலச்சேவைக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும், இதற்கான கட்டுநிதியை மாகாண அமைச்சிலிருந்து தமது சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் எடுத்துவந்து யாழ். கல்வித் திணைக்களக் கணக்காளரிடம் கையளித்துள்ளாரெனவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவரால் விடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது!

இருமாதங்களுக்கு முன்னர் கல்வித் திணைக்கள ஊழியர்கள் அனைவரும் 18 மாத காலத்திற்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை பெற்றுக் கொண்டபோதும், அதிபர், ஆசிரியர்கள் தொடர்பான கொடுப்பனவுகள் வழங்கப்படாமை தொடர்பாக சங்கம் தனது வன்மையான ஆட்சேபத்தை மாகாண மந்திரி அமைச்சிற்குத் தெரிவித்து இதுதொடர்பாக நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்தியிருந்ததாகவும், அதன் விளைவாகவே இக்கட்டுநிதியை தாமதம் இன்றி வழங்குவதற்காகச் சங்கத்தின் பிரதிநிதி தம்முடன் எடுத்து வந்ததாகவும் தெரிவித்தார்.

இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்படவிருக்கின்றபோதும், லீவு காலம், விடுமுறைக் காலம் போன்றவற்றிற்கும் வழங்க வேண்டுமெனவும், 1990 ஜூலை மாதத்திலிருந்து வழங்கப்பட வேண்டிய ஊக்குவிப்புப்பணத்தையும் வழங்க வேண்டுமெனவும் சங்கம் வற்புறுத்திவருவதாகவும், இதற்கான சாதகமான முடிவு அடுத்தசிலமாதங்களினுள் மேற்கொள்ளப்படவிருப்பதாகச் சங்கம் நம்புவதாகவும் பொதுச் செயலாளர் த. மகசிவம் தெரிவித்தார்.

இக் கொடுப்பனவுக்கென ரூபா 10 கோடி கட்டுநிதி வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் யாழ் மாவட்ட ஆசிரியர்கள், கல்வித் திணைக்களத்திக் கடமையாற்றும் ஊழியர்களுக்குரிய இம்மாதச் சம்பளக் கட்டுநிதி வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் இதுவரை யாழ் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வருடாந்தக் கணக்கு முடிவு காரணமாக டிசம்பர் மாதச் சம்பளம் 18 ஆம் திகதிக்குமுன் வழங்கப்படவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது

## சிமெந்து

லங்கைக்கு தொடர்ந்து தனது ஆதரவை வழங்கும் (...) லண்டனிலுள்ள அவர் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடாத்தியபோதே அவர் சிமெந்தை வழங்க மறுத்துவிட்டார்.

இதனால் கடந்தகாலங்களில் சிறிலங்கா விமானப்படையின் குண்டுவீச்சுக்கு இலக்காகிப் பகுதி சேதமடைந்துள்ள கட்டடங்களைத் திருத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இக்கட்டடங்களைத் திருத்த அரசு பணத்தை ஒதுக்கியிருந்த போதும் சிமெந்தை வழங்க மறுத்துவிட்டது. இதனால் திருத்த வேலைகள் கைவிடப்பட்டுள்ளன. (ச)

## அரிசி

இடப்பமே மேற்படி கட்டுப்பாடு நீக்கப்படாததற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் மாவட்ட மக்களின் நன்மை கருதி சிவிநெச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தேங்கியுள்ள நெல்லை யாழ் மாவட்டத்திற்கு எடுத்து வந்து வினியோகிக்கும்படி சம்மந்தப்பட்டவர்களையும் யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் கேட்டுள்ளார்.

இதேவேளை அரிசியின் உச்சவிலை 31 ரூபாயாகவே இருக்கும் எனவும் நுகர்வோரின் நன்மை கருதி நீக்கப்படமாட்டாதெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# லங்கா சிமெந்து 25 வீத சம்பளக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை லங்கா சிமெந்து லிமிடெட் ஊழியர்களின் ஐப்பசி கார்த்திகை மாதங்களிற்கான இருபத்தைந்து சதவீதமான சம்பளப் பணம் வழங்கப்பட்டு வருகிறது. இக் கொடுப்பனவுகள் நேற்று முன்தினம் முதல் கன்னாதிட்டி அலுவலகத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

# உபவேந்தர்கள் தலைவராக பேராசிரியர் பீரிஸ்

பல்கலைக் கழகங்களின் உபவேந்தர்கள் குழுவின் தலைவராகப் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் என்பது குறிப்பிடத்தக்கது

# சுகாதார பற்யிசி வகுப்பு

போரூர் நிறுவன ஆதரவில் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள சகல பொது ஸ்தாபனங்களிலும் கடமையாற்றும் தொண்டர்களுக்கு சுகாதாரம் சம்பந்தமான ஒருமாத பயிற்சி வகுப்பு ஒன்று நடைபெறவுள்ளது

ஆரம்ப சுகாதார திட்டத்தில் உள்ள 18 அம்சங்களையும் உள்ளடக்கியதாக இப் பயிற்சி வகுப்பு நடைபெறும். மேற்படி பயிற்சி வகுப்பு எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் சுளிபுரம் விக்ரோறியா கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ச)

## லொறி,

வைத்தியசாலைக்கு எடுத்து வரப்படும்போது மரணமானார். சினியர் ஒழுங்கையைச் சேர்ந்த ஜெயக்கொடி துரைராசசிங்கம் (வயது 22) படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரது நிலை கவலைக்கிடமாக உள்ளது. (ச)

